**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. மகேந்திரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் சுத்தமல்லியில் வசித்து வருகிறேன். எல்ஜி கம்பெனியில் சொட்டுநீர் பாசனம் பிரிவில் வேலை பார்த்து வருகிறேன். காட்டப்படும் தோராயமதிப்பு சான்றிதழ் நான் வழங்கியதுதான். நான் பாணான்குளத்தை சார்ந்த முருகன் என்பவருக்கு சொட்டுநீர் பாசனம் அரசு மானியத்தை போட்டுகொடுத்தேன். நான் போட்டுக்கொடுத்த சில நாளில் அதை யாரோ உடைத்து சேதம் ஏற்படுத்தியதாக கூறினார். நான் 29.12.2019 ம் தேதி காலை 11.00 மணியளவில் அ.சா.1 ன் வாழை தோட்டத்திற்கு சென்று உடைந்த பொருள்களை பார்வையிட்டேன். உடைந்த பொருள்களின் சேதமதிப்பு தோராயமாக ரூபாய். 15000/- இருக்கும் என சான்று வழங்கினேன். மேற்படி சேதமதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகும். போலீஸார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சொட்டுநீர் பாசனத்திற்கு தேவையான பைப்களை வாடிக்கயாளர் செலுத்திய ரசீது அடிப்படையில் பைப்களை கொடுப்போம் என்றால் சரிதான். மேற்படி பைப் எனது நிறுவனத்திலிருந்து கொடுத்ததற்கான

ஆதாரம் வாடிக்கையாளருக்கு வழங்குவோம் என்றால் சரிதான். நாங்கள் கொடுக்கும் பைப்களில் எனது நிறுவனத்தின் பெயர் இருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு போகும்போது அங்கு வாழை பருவத்தில் இருந்தது என்றால் சரிதான். நான் போகும்போது சம்பவயிடத்தில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்வையிட்டு பைப்பிற்கு சேதமதிப்பு சான்றிதழ் வழங்கவில்லை என்றால் சரியல்ல. போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 29.12.2019 ம் தேதி சம்பவயிடத்தை பார்வையிட்டவுடன் சேதமதிப்பு ரசீது எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் பாணான்குளம் பஸ்ஸ்டாப்பில் வைத்து அ.சா.1 யிடம் கொடுத்தேன்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. செல்லதுரை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் முதலைகுளத்தில் வசித்து வருகிறேன். வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **<u>அ.சா.ஆ.3</u>** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை 2019 ம் வருடம் காலையில் அ.சா.1 க்கு சொந்தமான வயலில் பைப், மோட்டார் ஆகியவை பிய்ந்து கிடந்ததாகவும், அதை துாக்குவதற்காக அ.சா.1 என்னை அழைத்தார்கள். அப்போது 2 போலீஸார் வந்து சம்பவயிடத்தை பார்த்து ஆய்வுசெய்தார்கள். அதனால் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 முருகன் என்னுடைய சித்தப்பா என்றால் சரிதான். அ.சா.1 என்னை மோட்டார் தண்ணீருக்குள் பிய்ந்து கிடப்பதாகவும், அதை துாக்குவதற்காக என்னை கூப்பிட்டார் என்றால் சரிதான். அ.சா.1 என்னை கூட்டிசெல்வதற்கு முன்பாக போலீஸார் சம்பவயிடத்தில் இருந்தார்என்றால் சரிதான். அ.சா.1 என்னை எங்கிருந்து

கூட்டிசென்றார்கள் என்றால் போன் செய்து என்னை வரசொல்லி அழைத்தார். நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு சென்றதாகவும், அங்கு வைத்து சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1ன் ஊரான முதலைகுளத்திற்கும் சம்பவயிடத்திற்கும் 1 ½ கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். முதலைகுளம் பஞ்சாயத்து ஆபிஸ் காவல்நிலையத்திற்கு அருகே உள்ளது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்டபிறகு விசாரணைக்காக அ.சா.1 என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய சித்தப்பா என்பதால் அவரின்வேண்டுகோளுக்கிணங்க நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | **திரு. சுடலைமணி** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் முதலைகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பு காலையில் பஞ்சாயத்து ஆபிஸ் முன்பாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீஸ் விசாரணைக்கு வந்ததாக கூறினார்கள், அதனால் நான் சாட்சியாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

16.12.2019 ஆம் தேதி 09.00 மணிக்கு சம்பவ இடமான பாணான்குளம் வாதியின் வயற்காடு மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி

வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. கோயில்பிச்சை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் பாணான்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய பக்கத்து தோட்டத்துக்காரர். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 சம்பவகாலத்தில் எதற்காக வழக்கு கொடுத்தார் என தெரியாது. வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

போலீஸ் விசாரணைன்போது 16.12.2019 ம் தேதி காலை 06.00 மணியளவில் பாணான்குளம் மணிமுத்தார் காலுக்கு தெற்கே உள்ள முருகன் வயலிலிருந்து மோட்டார் பைப், சொட்டுநீர் பாசன பைப்பினையும் எதிரி அருவாளால் வெட்டி சேதப்படுத்தியதாக, நீங்கள் கேள்விப்பட்டதாக போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. செல்வராஜ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் முதலைகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மகன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய உறவினர், அண்ணன் மகன். 16.12.2019 ம் தேதி காலை 06.00 மணியளவில் நானும் அ.சா.1 ம் மோட்டார் போடுவதற்காக வயலுக்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரி சொட்டுநீர் பாசனத்தையும், மோட்டார் பைப்பையும் அருவாளால் வெட்டிகொண்டிருந்தார். என்னுடைய மகன் சென்று ஆஜர் எதிரியை சத்தம் போட்டார். அதற்கு ஆஜர் எதிரி புண்டாமவனே உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என அ.சா.1 யை பார்த்து கூறினார். நீ எப்படி என் மனைவியிடம் சென்று ரூபாய் கேட்கலாம் என்று தாறுமாறாக திட்டினார். சத்தம்கேட்டு நான் சென்றேன். என்னையும் எதிரி வெட்டாமல் விடமாட்டேன் என சொல்லிவிட்டு தெற்கு பக்கம் ஓடிவிட்டார். பின்னர் நானும் அ.சா.1 ம் இதுசம்பந்தமாக மூன்றடைப்பு காவல்நிலையம் சென்றோம். அ.சா.1 புகார் மனு கொடுத்தார். வெட்டப்பட்ட பைப்பின் மதிப்பு ரூபாய். 15000 இருக்கும். போலீஸார் என்னை விசாரணை செய்தனர்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடப்பதற்கு முன்பு எதிரியும் அ.சா.1ம் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பேசிக்கொள்ளமாட்டார்கள் என்றால் சரிதான். எதிரியின் அப்பா எனக்கு அண்ணன் முறை என்றால் சரிதான். சொத்து பாகபிரிவினை செய்வதில் எனக்கும் என் அண்ணனுக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். சம்பவகாலத்தில் சொட்டுநீர் பாசனம் வாழைக்கு செய்தோம் என்றால் சரிதான். வாழை வயலில்தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். நான் சத்தம் போட்டவுடன் எதிரி தெற்கு பக்கம் ஓடினார் என்றால் சரிதான். அதன்பிறகு வயலில் இருந்து நானும் அ.சா.1ம் இருசக்கர வாகனத்தில் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையம் எவ்வளவு துாரம் என்றால் 1கிமீ இருக்கும்.

சம்பவம் நடந்த பிறகு ¼ மணி நேரத்தில் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு எங்கேயும் நிற்காமல் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு சென்றபிறகு அ.சா.1 சொல்ல சொல்ல யார் எழுதினார் என்றால் காவல் உதவி ஆய்வாளர் எழுதினார். பின்னர் நானும் அ.சா.1ம் வீட்டிற்கு சென்றோம் என்றால் புகார் கொடுத்தபிறகு 8 மணிக்கு போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். நானும் அ.சா.1ம் புகார் கொடுத்தபிறகு சம்பவயிடத்திற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான். எத்தனை போலீஸார் வந்தார்கள் என்றால் 4 போலீஸார் வந்தார்கள்.

சுடலைமணி, வெள்ளதுரை என்பவர்கள் நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்தார்கள் என்றால் சரிதான். சுடலைமணி, வெள்ளதுரை என்பவர்கள் எனக்கு சொந்தம் என்றால் எனக்கும், எதிரிக்கும் சொந்தம். போலீஸார் சம்பவயிடத்தை 09.30 மணிக்கு பார்வையிட்டு வெட்டப்பட்ட பைப்பை சுடலைமணி, வெள்ளதுரை ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். பின்னர் காவல்நிலையத்திற்கு போலீஸார் எங்களை விசாரணைக்கு வருமாறு அழைத்தனராஎன்றால் இல்லை. சம்பவம் நடந்த இரவு எதிரியை கைது செய்து, ஊரிலிருந்து அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான்.

எதிரி அழைத்து சென்றபிறகு நான் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவியிடம் எதிரி இல்லாதபோது அ.சா.1 அநாகரிகமாக பேசியதால்தான் எதிரிக்கும் அ.சா.1க்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரியின் மனைவி சமுத்திரகனியும், அவரது மாமனாரும் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார்கள் என்றால் சரிதான். ஊரில் நல்ல விஷயங்கள் நடக்கும் போது காவல்நிலையத்திற்கு ஒத்துழைப்பு கொடுப்பார் என்றால் சரிதான். நான் சொல்வது போல சம்பவம்

நடந்தது என்று எனது கற்பனை என்றும், எதிரியின் மனைவியிடம் அ.சா.1 அநாகரிமாக பேசியதால் எதிரியின் மனைவி காவல்நிலையத்திற்கு புகார் கொடுத்ததால் அதிலிருந்து தப்பிக்க வேண்டு காவல்நிலைய செல்வாக்கை பயன்படுத்தி நானும் எனது மகனும் பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.58/2020 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. முருகன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of July 2025.

நான் முதலைகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய உறவினர், பெரியப்பா மகன். 16.12.2019 ம் தேதி காலை 06.00 மணியளவில் நானும் எனது அப்பா செல்வராஜ்ம் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்றோம். அப்போது எதிரி மோட்டருக்கு செல்லும் பைப், சொட்டுநீர் பைப் ஆகியவற்றை அருவாளால் வெட்டிக்கொண்டிருந்தார். நான் ஏன் பைப்பை வெட்டுகிறாய் என சத்தம் போட்டேன். அதற்கு எதிரி நீ ஏன் என் வீட்டிற்கு சென்று பணம் கேட்டாய் என்று கேட்டார் (எதிரி எனக்கு சீட்டு பணம் தரவேண்டியிருந்தது). நீ எப்படி என் மனைவியிடம் சென்று ரூபாய் கேட்கலாம், இனிமேல் கேட்டால் உன்னை வெட்டிவிடுவேன் என மிரட்டினார். பின்னால் வந்த என்னுடைய அப்பா என்னல சவுண்ட் என சத்தம் போட்டார். பின்னர் எதிரி ஓடிவிட்டார். நான் மூன்றடைப்பு காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன்.

காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். எதிரி

சேதப்படுத்திய பைப்பின் மதிப்பு ரூபாய். 15000/- இருக்கும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய அப்பாவும், எதிரியின் அப்பாவும் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என்னுடைய அப்பாவுக்கும் எதிரியின் அப்பாவுக்கும் வீட்டு பக்கத்தில் உள்ள தென்னமரங்களை அனுபவிக்கிறதுக்கு பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தின் பட்டா எனது அப்பாவின் பெயரில் உள்ளது என்றும், தென்னை மரங்களை எதிரியின் அப்பாவும், என்னுடைய அப்பாவும் வைத்தார்கள் என்றால் சரிதான். தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களை பறிப்பதில் என் அப்பாவிற்கும், எதிரிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். தென்னங்காய்களை பறிக்கக்கூடாது என என்னுடைய அப்பா எதிரியிடம் கூறினார் என்றால் சரிதான். என்னுடைய குடும்பமும், எதிரியின் குடும்பமும் எத்தனை நாள் பேசாமல் இருந்தோம் என்றால் சுமார் 5 அல்லது 6 வருடங்கள் இருக்கும். சம்பவநடந்ததாக சொல்லப்படும் இடம் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான்.

எங்களின் சத்தம் கேட்டு அப்பா வரும்போது எதிரி பயந்து எந்த பக்கம் ஓடினார் என்றால் தெற்கு பக்கம் ஓடினார். காவல்நிலையத்தில் கொடுத்த புகார்மனுவை யார் எழுதினார் என்றால் மூன்றடைப்பில் வாடிக்கையாக மனு எழுதிகொடுக்கும் நபரை வைத்து எழுதினேன். புகார் மனுவை யாரிடம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. புகார் கொடுத்த 10 நிமிடங்களில் போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான். போலீஸார் வெட்டப்பட்ட பைப்களை பார்வையிட்டு போட்டோ எடுத்தனர் என்றால் சரிதான். வெட்டப்பட்ட பைப்களை போலீஸார் எடுத்து சென்றனர் என்றால் இல்லை, போட்டோ மட்டும்தான் எடுத்துசென்றார்கள்.

சம்பவயிடத்தை நான் தான் கூட்டி சென்று போலீஸாருக்கு காண்பித்தேன் என்றால் சரிதான். சம்பவயிடத்தை பார்வையிட்டு எதிரியையும், எனது அப்பாவை போலீஸார் விசாரணைக்கு வருமாறு சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அன்று காலை 11.00 மணிக்கு எதிரியை காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் அடையாளம் காட்டினார் என்றால் சரிதான். அதன்பிறகு என்னிடம் போலீஸார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது போல எந்த சம்பந்தமும் நடைபெறவில்லை என்றும், நான் எதிரி வீட்டில் இல்லாததால் எதிரியின் மனைவியிடம் அநாகரிகமாக பேசினேன் என்றும், அதனால் எதிரி எதரியின் மனைவி காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி கொடுத்த புகாரை வழக்கு பதிவுசெய்துவிடுவார்கள்

என கருதி, காவல்நிலைய செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி, நேரத்தில் புகார்மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.